பக்கங்கள் 16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 28 | செவ்வாய்க்கிழமை 13.08.2024 | அதிர்வு 011

## நாமல் எமக்கு சவால் அல்ல!

**ரணில் அணி விளாசல்**



"ஜனாதிபதித் தேர்தலில் எமக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில்தான் போட்டி நிலவும். ஜனாதிபதி வேட் 04



### வலிமையான நாடாளுமன்றப் பலம் இருந்தால்

# சமஷ்டி பற்றியும் பேசலாம் என்கின்றார் ஜனாதிபதி!

**சமஷ்டி முறையான அரசியல் தீர்வுக்கு ஆதரவான - பலம் மிக்க - நாடாளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் அது சம்பந்தமாகப் பரிசீலித்து முன்னேற்றகரமான முடிவுகளை எதிர்காலத்தில் எட்ட முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.**

**தம்மை நேற்றுச் சந்தித்த மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடமே அவர் இதனைத் தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.**

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய மூன்று கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று நேற்று மாலை அவரைச் சந்தித்தன.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

"நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று மாலை 4 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர்நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் 04

## கோர விபத்தில் இருவர் உடல் நசுங்கி உயிரிழப்பு



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பண்டாரகம – கெஸபேவ வீதியில் வெல்மில்ல கல்கடே சந்திக்கு அருகில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த பஸ் வீதியின் வல 04



தமிழ்ப் பொதுக் கட்டமைப் பின் பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும் சந்தித்துப் பேசுவதற்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் சஜித் பிரேமதாஸ. இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் ஒவ்வொருவருக்கும் அவர் தாமே நேரடியாகத் தொலைபேசி எடுத்து அழைப்பு விடுத்திருக்கின்றார் என்பதுதான்.

அது மனதைத் தொட்டாலும், நாளை இந்தத் தேர்தலில் 04

# ஜனாதிபதித் தேர்தலுக்காக இதுவரையிலும் 31 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக இதுவரை கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது.

இதன்படி, நேற்று 3 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்டுப்பணம் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் இன்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

வேட்புமனுக் கோரல் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் 11 மணி வரை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் இராஜகிரிய பகுதியிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதனை அண்மித்த பகுதியில் விஷேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

# நாமலின் ஆட்டம் 21 இல் ஆரம்பம்!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் பிரதான தேர்தல் பிரசாரம் எதிர்வரும் 21ஆம் திகதி அநுராதபுரத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர், நாமல் ராஜபக்ஷ சர்வமத வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

அவர் விகாரைகள், கோயில்கள், பள்ளிவாசல்கள் மற்றும் தேவாலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக 5 நாள்கள் வரை ஒதுக்கப்பட்டுள்ளன.

அதன்பின்னர் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் அவரின் தேர்தல் பிரசார நடவடிக்கை இடம்பெறும்.





# யாழில் 156 கிலோ கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் 156 கிலோகிராமுக்கும் மேற்பட்ட கேரள கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மன்னார் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள், இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு தொகை கேரள கஞ்சாவை யாழ். அரியாலைப் பகுதியில் வைத்துக் கைப்பற்றினர்.

அதனை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த 39 மற்றும் 44 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 156 கிலோகிராமுக்கும் அதிகமான கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதன் பெறுமதி சுமார் 4 கோடி 20 இலட்சம் ரூபா என்று பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.




# பெருந்தோட்ட மக்களை வலுவூட்டுவதுதான் பிரதான நோக்கம் என்கிறார் சஜித் பிரேமதாஸ

வாக்குறுதிகள் மற்றும் சலுகைகளில் மட்டுப்படுத்தாமல் பெருந்தோட்ட மக்களை வலுவூட்டுவதே ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மலையக தமிழர் அபிலாசைகள் அடங்கிய உடன்படிக்கை ஒன்று நேற்று தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வின் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சகல பகுதிகளிலும் இருக்கின்ற பெருந்தோட்ட தொழிலாளர்களின் அரசியல், பொருளாதாரம், கல்வி, நிர்வாகம் உள்ளிட்ட சகல துறைகளையும் வலுவூட்டுவதற்கான தெளிவான யோசனைகள் இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பிரஜைகளாக பெருந்தோட்ட மக்கள் இருக்கின்ற போதிலும், நலிவடைந்துள்ள சகல விடயங்களையும் மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.







## மன்னார் வைத்தியசாலையில்

# உயிரிழந்த சிந்துஜாவுக்கு நீதி கேட்டு ஜனநாயகப் போராட்டத்துக்கு அழைப்பு

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மரணித்த சிந்துஜாவுக்கு நீதி கேட்டு அந்த வைத்தியசாலை முன்பாக இன்று காலை 9 மணிக்குக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் 28ஆம் திகதி இறந்த திருமதி சிந்துஜா மரியராஜின் மரணம் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகள் நடைபெற்று ஒரு வாரம் கடந்த போதும் இதுவரை எதுவிதநடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. தாமதிக்கும் நீதி மறக்கப்பட்ட நீதியாகவே நாம் கருதுகின்றோம். ஆகவே, வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயற்பாட்டால் இறந்தவருக்கு நீதி வேண்டும். இப்படி இன்னொரு கொலை நடைபெறக்கூடாது.

எனவே, குற்றம்சாட்டப்பட்டவர்களைப் பாதுகாக்க நினைக்கும் மத்திய மற்றும் மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு எதிராக சிந்துஜாவுக்கு நீதி வேண்டி மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளதால் இந்தப் போராட்டத்தில் தார்மீக அடிப்படையில் கலந்துகொள்ளுமாறு அழைப்பதுடன் அனைத்து உறவுகளையும் அணிதிரளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வென்று ஜனாதிபதியானால், அவரை நேரில் காண முடியுமோ, இப்படி தொலைபேசியில் பேச இயலுமோ என்று அங்கலாய்த்து கொண்டார் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதியான நண்பர் ஒருவர்.

நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த ரெலோ, புளொட்டின் பிரதிநிதிகள் இன்று காலை 7.30 மணிக்கு கொழும்பில் எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் சஜித் பிரேமதாஸவைச் சந்திக்க உள்ளனர் என்று தெரிகின்றது.

நேற்று ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கு பற்றிய ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் இருவரும் நேற்றிரவே கொழும்பிலிருந்து புறப்பட்டு விட்டமையால் இன்று சஜித்துடனான சந்திப்பில் அவர்கள் தரப்பு பங்குபற்றவில்லை. எனினும் சஜித் பிரேமதாஸ அடுத்த தடவை யாழ் வரும் போது அங்கு அவரைத் தேடி வந்து சந்திப்போம் என்று சஜித் பிரேமதாஸவுக்கு அவர்கள் உறுதிமொழி அளித்திருக்கின்றனர் என்றும் தெரிகின்றது.

13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கத்தை ஒட்டித் தான் செய்யப் போகின்ற விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே பட்டியலிட்டு சுமந்திரனிடம் கையளித்திருக்கின்றார்.

அதில் அவர் தற்போது சில திருத்தங்களைச் செய்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. திருத்தப்பட்ட புதிய பட்டியலை நேற்றுத் தம்மைச் சந்தித்த மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையளித்திருக்கின்றார்.

இந்தப் பட்டியலில் சில மாற்றங்களை தாம் ஏற்படுத்தியிருக்கின்றமையால் அவை குறித்தும், 13 ஐ ஒட்டித் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய காரியங்கள் குறித்தும் ஆலோசிப்பதற்காக சுமந்திரனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைத்திருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

அதன்படி சுமந்திரன் நாளை புதன் கிழமை காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் சந்தித்துப் பேசவிருக்கின்றார்.

ரணில் 13 ஐப் பற்றியும் பேசுகின்றார், வலிமையான நாடாளுமன்ற ஆதரவு இருக்குமானால் சமஷ்டி குறித்தும் கூடப் பேச முடியும் என்கிறார்.

சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

## நாமல்...

பாளர் நாமல் ராஜபக்ஷ எமக்குச் சவால் அல்ல. மஹிந்த ராஜபக்ஷ மீது நாட்டு மக்கள் மரியாதை வைத்துள்ளார்களே தவிர ராஜபக்ஷ குடும்பத்தின் மீது மரியாதை வைக்கவில்லை."

– இவ்வாறு ரணில் ஆதரவு அணியான வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது நாங்கள் இன்றும் மரியாதை வைத்துள்ளோம். அதேபோல் நாட்டு மக்களும் மரியாதை வைத்துள்ளார்கள். ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தின் மீது நாட்டு மக்கள் மரியாதை வைத்திருக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும்.

முதலாவதும் நாடு, இரண்டாவதும் நாடு, மூன்றாவதும் நாடு என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுவார்.

தற்போதைய நிலையில் நாட்டைப் பற்றி மாத்திரமே சிந்திக்க வேண்டும் என்பதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம். ஆகவே, எமது தீர்மானத்துக்கு அவர் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில்தான் போட்டி. ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ எமக்கு ஒரு சவால் அல்ல. ஜனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்லே சீலரத்ன தேரருக்கும் நாமல் ராஜபக்ஷக்கும் இடையில்தான் போட்டி.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசை நிச்சயம் தோற்றுவிப்போம். எமது தேர்தல் பிரசாரங்களை இவ்வாரம் முதல் ஆரம்பிப்போம். ஜனாதிபதியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்." – என்றார்.

## கோர விபத்தில்...

பக்கமாக விலகி பஸ் நிறுத்தும் இடத்தின் மீது மோதியதில் அந்த இடத்தில் நின்ற இருவர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் அக்குரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த எம்.ஏ. சாந்த ரஞ்சித் என்ற 53 வயதுடைய நபரும், பனாதர, பெரால பகுதியைச் சேர்ந்த எஸ்.கே. சுமனசிறி என்ற 60 வயதுடைய நபரும் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சமஷ்டி...

எம்.பியும், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் அதன் தலைவர் வேந்தன் மற்றும் செயலாளர் துளசி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கிய சூழலிலே இந்தச் சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராகப் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அழைப்பைத் தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் இந்த அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும், ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்காகவும் இந்தச் சந்திப்பில் பங்கேற்பது என்று முடிவு செய்தனர்.

இந்தச் சந்திப்பில் பிரதானமாகத் தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருப்பதனாலேயே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

ஜனாதிபதி தரப்பில் சமஷ்டி முறையான அரசியல் தீர்வு என்பது பலம் மிக்க நாடாளுமன்றம் ஒன்று அமையும் பட்சத்தில் அது சம்பந்தமாகப் பரிசீலித்து முன்னேற்றகரமான முடிவுகளை எதிர்காலத்தில் எட்ட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காகத் தான் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார் என்று ஜனாதிபதி தெரிவித்தார். அதற்காகத் தன்னிடம் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் யோசனைகள் அடங்கிய ஆவணம் ஒன்றையும் அவர் சமர்ப்பித்தார்.

ஏற்கனவே மாகாண சபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவதாகவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாண சபை கொண்டிருக்கும் எனவும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள், யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம் உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன.

இதற்கான தீர்வுகளை தான் நிச்சயமாக வழங்குவதாகவும், ஏற்கனவே சில விடயங்களுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் தொல்லியல் விவகாரங்களைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் சமர்ப்பித்த ஆவணத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்ந்தும் சந்திப்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமான மேலதிக கலந்துரையாடல்களை நடத்துவதற்கு தமது தரப்பிலும் தயாராக இருப்பதாகச் சொல்லிய தமிழ்த் தரப்பினர், அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து கருத்துத் தெரிவிப்பதாகக் கூறியதுடன் சந்திப்பு நிறைவடைந்தது." – என்றுள்ளது.







# தம்பலகாமம் பத்தினிபுரம் மக்களுக்கான இந்து மயானத்துக்குக் காணி கையளிப்பு

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவின் பத்தினிபுர கிராம மக்களுக்கான இந்து மயானத்துக்கான காணி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால்



நேற்று மாலை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பத்தினிபுர கிராமத்தில் வைத்து மக்களிடத்தில் உரிய ஆவணம் கையளிக்கப்பட்டது.

சுமார் 25 வருடகாலமாக இந்து மயானம் இன்றி வாழ்ந்த மக்களுக்காக தற்போது வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள காணியே இந்து மயானத்துக்காக ஒப்படைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச சபை செயலாளர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நீண்டகாலமாக நிலவிய இந்து மயானப் பிரச்சினைக்கு பத்து நாள்களுக்குள் தீர்வு பெற்று தந்த கிழக்கு மாகாண ஆளுநருக்கு மக்கள் நன்றிகளையும் தெரிவித்தனர்.

இதன் போது திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ள முத்து நகர் கிராம மக்களும் தங்கள் வயல் நில குடியிருப்பு பகுதிகளை இலங்கை துறை முக அதிகார சபையினர் கையகப்படுத்த முயற்சிப்பதாகவும் ஆளுநரிடம் சுட்டிக்காட்டினர். இது தொடர்பில் உரிய சாதகமான நடவடிக்கை எடுப்பார் என மக்களிடத்தில் ஆளுநர் உறுதியளித்தார்..







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் புதிய கருத்துரை

மூன்று தமிழ்க் கட்சிகளை நேற்று சந்தித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில விடயங்களை மனம் திறந்து பேசி இருக்கிறார் என்று அறிய வருகின்றது.

''இந்த இனப் பிரச்சினையும் பழையதுதான். இதை கையாளும் நானும் பழையவன்தான். இதற்காக குரல் எழுப்பும் நீங்களும் பழையவர்கள்தான். உங்கள் கோரிக்கையும் பழையதுதான். எல்லோருக்கும் விடயங்கள் தெரியும். இது நமக்கு புதிய விவகாரம் அல்ல. நமக்குத் தெரிந்த - பரிச்சயமான - விளங்கிய - விடயம்தான்.'' - என்று பீடிகையுடன்தான் தமது கருத்து வெளிப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க பகிர்ந்திருக்கின்றார்.

வெளியில் பகிரங்கப்படுத்தவோ, மேற்கோள்காட்டவோ கூடாது என்ற குறிப்போடு, இந்தப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு நீங்கள் வலியுறுத்தும் சமஷ்டி வடிவத்தை ஒட்டியதாக அமைய வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அதற்கு இணங்கும் வலிமையான நாடாளுமன்றம் இல்லாமல் அது குறித்து பேசுவதோ, உறுதிமொழி தருவதோ அர்த்தமற்றது என்ற சாரப்படவும் அவர்கருத்து வெளியிட்டு இருக்கின்றார்.

''அதனைத்தான் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்ற உருமாற்றத்தோடு நாம் தர முயற்சித்தோம். நல்லாட்சி அரசில் புதிய அரசமைப்பு மூலம் அதை நாம் நகர்த்தினோம். இரண்டாவது வாசிப்பு வரை அத்திட்டத்தை எம்மால் வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது. ஆனால் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்திய குழப்பத்தால் அதனை ஒப்பேற்ற முடியவில்லை'' - என்று சுட்டிக்காட்டி இருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

அதுமட்டுமல்ல, புதிய தீர்வை - அது சமஷ்டியோ வேறு வடிவமோ - நிறைவேற்றதிகார ஜனாதிபதியால் மட்டும் தனித்துத் தர முடியாது. அதற்கு வலிமையான நாடாளுமன்றமும் வேண்டும். வலிமையான நாடாளுமன்றத்தில் - மூன்றில் இரண்டு பங்கு எம்பிக்களின் ஆதரவை - கொண்டிராத ஜனாதிபதி வேட்பாளர்களினால் அத்தகைய உறுதிமொழியைதந்து அவற்றைசாத்தியமாக்க முடியாது என்ற யதார்த்தத்தையும் அவர் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

இப்போது ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கும் எல்லா வேட்பாளர்களுமே ஏதோ ஒரு மட்டத்திலான தீர்வுக்கு பச்சைக் கொடி காட்டுகின்றனர். இது சுமுகமான நிலைமை. இவர்களின் பிரதிநிதிகள்தான் நாடாளுமன்றத்திற்கு வரப் போகின்றார்கள். அப்போது தீர்வுக்கு வலிமையான நாடாளுமன்றமும் கிடைக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு என்று விவரித்து இருக்கின்றார் ரணில். அப்போதுதான் - அங்குதான் - அது குறித்து விரிவாகப் பேச வேண்டும் என்றும் அவர் சுட்டியிருக்கின்றார்.

அதனால்தான் - அத்தகைய தீர்வு உறுதிமொழியை தனி ஜனாதிபதியாகத் தந்து அதை நிறைவு செய்ய முடியாது என்ற காரணத்தினால்தான் - இருக்கும் 13 இன் நடைமுறையாக்கம் பற்றிப் பேசுகிறேன். 13 இல் இருந்து மீளப் பெறப்பட்ட அனைத்தையும் தருவது உட்பட நான் அதில் செய்ய உள்ள ஏற்பாடுகளைப் பட்டியலிட்டு உங்களிடம் தருகிறேன் என்று கூறியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

ரணிலின் இந்த விளக்கத்தில் ஆழமான - புதிய - அர்த்த பரிமாணம் ஒன்று இருப்பதைக் காண முடிகின்றது.

சஜித்தும் ஏனையோரும் 13 ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கம் பற்றி மட்டுமே பேசுகின்றனர். ஆனால் அதற்கு அப்பால் வலிமையான நாடாளுமன்றத்தின் மூலம் சமஷ்டிக்கான தீர்வு பற்றியும் கையாளலாம், ஆனால் அதற்கான வாக்குறுதியைத் தனித்து ஜனாதிபதியாகத் தான் தர முடியாது என்று அவர் உரைப்பதில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

13 இற்கு அப்பாலும் வாய்ப்புகள் குறித்தும் ரணில் பேசுவது இந்த சமயத்தில் கவனிக்கப்பட வேண்டும்.



# அநுர குமார ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுவில் நேற்றுக் கையொப்பம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க, தேர்தலுக்கான வேட்புமனுவில் நேற்று கைச்சாத்திட்டார். மக்கள் விடுதலை முன்னணி அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முன்னாள் நிர்வாகிகளால் இந்த நாடு பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக தெரிவித்த அவர், நெருக்கடிக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிக்கும் சவாலை ஏற்றுக்கொள்ள தேசிய மக்கள் சக்தி தயாராகவுள்ளதாக குறிப்பிட்டார்.

இதனிடையே, ஜனாதிபதி தேர்தலின் வேட்பாளருக்கான வேட்புமனுவில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் பிற்பகல் கையொப்பமிட்டிருந்தார்.

# தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுமே சொத்து விவரங்களை வெளிப்படுத்துவது அவசியம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் ஊழல் ஒழிப்பு சட்டத்தின் கீழ், வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் போது தங்களது சொத்து விவரங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்க வேண்டும் என ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாள் வரை ஒவ்வொரு ஆண்டுக்குமான சொத்துவிவரம் அதில் குறிப்பிடப்பட வேண்டும் என ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பழக்கிராமங்களை உருவாக்கத் திட்டம்



பழக்கிராமங்களை உருவாக்குவதற்கு காலி மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்கீழ் 200 ஏக்கரில் வாழை, பப்பாசி, மாம்பழம், அன்னாசி மற்றும் தோடம்பழ செய்கைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்காக அன்னாசி மற்றும் வாழைக்கன்றுகளை இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அரச ஓய்வூதியதாரர்களுக்கு மேலதிகமாக 6,000 ரூபா




அரச சேவையில் உள்ள அனைத்து ஓய்வூதியர்களுக்கும் எதிர்வரும் ஒக்டோபர் மாத கொடுப்பனவுடன், மேலதிகமாக 6,000 ரூபாவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்படி, இடைக்கால கொடுப்பனவு மற்றும் கொடுப்பனவு நிலுவைத் தொகை ஆகிய இரண்டு பிரிவுகளின் கீழ் ஓய்வூதியதாரர்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வூதியதாரர்களுக்கு 6,000 ரூபாவை மேலதிக கொடுப்பனவாக வழங்குவது தொடர்பான யோசனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# உறங்கிக் கொண்டிருந்த பெண்ணைத் தாக்கிவிட்டு நகையைச் சூறையாடிய முகமூடிக் கொள்ளையன்!

## சம்மாந்துறை சம்பவத்தின் சூத்திரதாரி கைது; நகையும் மீட்பு

(பாறுக் ஷிஹான்)

முகமூடி அணிந்த நபர் ஒருவர் பெண் தாக்கி விட்டு நகைகளை கொள்ளையடித்து சென்ற சம்பவம் ஒன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. எனினும் முகமூடிக் கொள்ளயன் பின்னர் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் அதிகாலை வேளை 3 மணியளவில் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணை முகமூடி அணிந்த நபர் ஒருவர் தாக்கி விட்டு நகைகளைக் கொள்ளையடித்து சென்றார் எனச் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது கல்முனை பிரதேச நகைக்கடை ஒன்றில் நேற்று திங்கட்கிழமை கொள்ளையிடப்பட்ட நகை மீட்கப்பட்டுள்ளது. கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேக நபரும் சம்மாந்துறை பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 37 வயதுடை சந்தேக நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சீன அரிசியில் மறைந்திருக்கும் அரசியலைவிட அதில் உறைந்திருக்கும் ஆபத்துகளே அதிகம்

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையே 1952 ஆம் ஆண்டு இறப்பர் - அரிசி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இதற்கு அமைவாக, இலங்கை சீனாவுக்கு இறப்பரை ஏற்றுமதி செய்து பதிலாக அங்கிருந்து அரிசியை இறக்குமதி செய்து வந்துள்ளது. இலங்கையில் 1952ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரச்சரிவு இறப்பர் - அரிசி உடன்பாட்டுக்கு வழி சமைத்ததைப்போன்றே தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி சீனாவில் இருந்து அவ்வப்போது நன்கொடையாக அரிசியைக் கையேந்துவதற்கு வழிகோலியுள்ளது. அண்மையில் கூட வடக்கு, கிழக்குக் கடற்றொழிலாளர்களுக்கு சீனாவின் நன்கொடை அரிசி விநியோகப்பட்டுள்ளது. இந்நன்கொடையில் மனிதாபிமானத்தை விட பிராந்திய அரசியல் மேலோங்கியிருப்பது வெளிப்படையானது. ஆனால், சீன அரிசியில் மறைந்திருக்கும் அரசியலைவிட அதில் உறைந்திருக்கும் ஆபத்துகள் அதிகம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கு சீனா நன்கொடையாக வழங்கிவருகின்ற அரிசி குறித்து பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலகில் அதிகளவில் அரிசியை உற்பத்தி செய்யும் நாடாகவும் அதிக அளவில் அரிசியை ஏற்றுமதி செய்யும் நாடாகவும் சீனாவே முதலிடத்தில் உள்ளது. ஆனால், அண்மைக்காலத்து ஆய்வுகளின் முடிவுகள் சீனாவின் அரிசியில் சூழல்மாசு காரணமாகக் கட்மியம் அங்கீகரிக்கப்பட்ட அளவை விடவும் பன்மடங்கு அதிகமாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கட்மியம் உடலுக்கு அத்தியாவசியம் இல்லாத ஆபத்தான ஒரு பாரஉலோகம். உணவின் மூலம் உடலில் நுழைந்து நீண்டகாலம் தேங்கியிருக்கக்கூடிய இக்கட்மியம் சிறுநீரகங்களை செயலிழக்க வைப்பதோடு மார்பு, நுரையீரல், சதையம், சிறுநீரகம் போன்றவற்றில் புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.



இந்நிலையில், சீனாவில் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் தரப்பரிசோதனை செய்யப்படாத அரிசியை நுகர்வது குறித்துப் பொதுமக்கள் விழிப்பாக இருப்பது அவசியமாகும்.

இலங்கை 2023ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் தன்நிறைவைக் கொண்டிருந்தது. கடந்த பெரும் போகத்தில் மழைவெள்ளம் சில பிரதேசங்களில் நெற்செய்கையைப் பாதித்திருந்தாலும் இந்த ஆண்டினது ஒட்டுமொத்த நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படவில்லை. சீனா பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதை மாத்திரமே நோக்கமாகக் கொண்டிருப்பின் தனது சந்தேகத்திற்கு இடமான அரிசியை இலங்கையில் விநியோகிப்பதை நிறுத்தி இலங்கையிலேயே அதனைக் கொள்வனவு செய்து விநியோகிப்பதே சாலச்சிறந்தது. இந்நடைமுறை சரியான சந்தை வாய்ப்புகளின்றித் தவிக்கும் எமது விவசாயிகளின் வாழ்வை மேம்படுத்துவதோடு ஆபத்தான பாரஉலோகங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கவும் செய்யும். சோற்று அரசியல் சேற்றுக்குள் சிக்கி, மென்மேலும் எமது மக்களின் வாழ்வு சீரழியாமல் இருக்க உரிய தரப்புகள் இது குறித்து உடனடியாக ஆவனசெய்ய வேண்டும். - என்றும் தெரிவித்துள்ளார்.




# வாக்குகளைப் பெறுவதற்காக லஞ்சம் குற்றம் சுமத்தும் கண்காணிப்பாளர்கள்

வாக்குகளைப் பெறுவதற்காக அரசியல் பிரதிநிதிகள் சிலர் மக்களுக்கு லஞ்சம் வழங்குகின்றனர் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 84 முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளன என பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை அதிகாரம் மற்றும் சொத்துகளை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்களென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி றோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலவும் இந்தக் காலக்கட்டத்திலும் பிளாஸ்ட்டிக் கதிரைகள், கோழிக்குஞ்சுகள், பாடசாலை உபகரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தலை நோக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இது குறித்து மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் றோஹண ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறியதாக இதுவரை 44 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரவித்துள்ளார்.

தேர்தல் இலஞ்சமாக பல்வேறு பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன எனக் கடந்த 09 ஆம் திகதியிலிருந்து முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவில் 09 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறியதாக 04 முறைப்பாடுகளும் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக 05 முறைப்பாடுகளும் தமக்கு கிடைத்துள்ளண எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

கடந்த ஜுலை 31 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை நாடளாவிய ரீதியில் தேர்தல் சட்டங்களை மீறிய 320 செயற்பாடுகள் பதிவாகியுள்ளன எனவும் அவற்றில் 103 முறைப்பாடுகள் மாவட்ட தேர்தல் முறைபாட்டு முகாமைத்துவ நிலையத்திலும் 214 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திலும் பதிவாகியுள்ளன.

# விவசாயிகளுக்கு நட்டஈடு; வழங்க அமைச்சர் உத்தரவு



சிறுபோகத்தில் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களுக்கு உடனடியாக நட்டஈட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

இம்மாதம் பயிர்ச் சேதங்கள் பதிவாகியுள்ள பகுதிகளுக்கு இந்த இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு விவசாயத் திணைக்களத்துக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது பல பகுதிகளிலும் சிறுபோக அறுவடை நடைபெற்று வரும் நிலையில், அறுவடை நிறைவடைந்ததன் பின்னர் பயிர்ச் சேதத்திற்கான தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.




# தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இரண்டு கட்சிகளுக்கு அழைப்பு

அங்கீகரிக்கப்பட்ட இரு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கட்சிகளின் செயலாளர் பதவிகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எக்சத் லங்கா மகா சபா கட்சி மற்றும் லங்கா மக்கள் கட்சி ஆகிய 2 கட்சிகளின் பிரதிநிதிகளையே அழைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அங்கீகரிக்கப்பட்ட 6 அரசியல் கட்சிகளின் செயலாளர் பதவிகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என தேசிய தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, ஈழவர் ஜன நாயக முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உள்ளிட்ட 06 கட்சிகளின் செயலாளர் பதவிகளில் சிக்கல்கள் காணப்படுகின்றன என ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# நீதி அமைச்சராகவும் அலி சப்ரி பதவியேற்பு

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு பதவியிலிருந்து அண்மையில் விஜயதாச ராஜபக்ஷ விலகியதை தொடர்ந்து ஏற்பட்ட பதவி வெற்றிடத்திற்காக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



# இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் வயோதிப மாது வீட்டில் சடலமாக மீட்பு

## புத்தளம் மதுரங்குளி பொலிஸ் பிரிவில் சம்பவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

புத்தளம் – மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நல்லாந்தளுவ பகுதியில் வயோதிப பெண்ணொருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இரு கைகளும் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதுரங்குளி – நல்லாந்தளுவ பிரதேசத்தில் வசித்து வந்த 71 வயதான செல்ல மரிக்கார் ஜனா உம்மா எனும் மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வயோதிபப் பெண் நீண்ட காலமாக தனக்கு சொந்தமான இரண்டரை ஏக்கர் தென்னந்தோட்டத்தில் உள்ள வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு வீட்டில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தனது மகளின் வீட்டிற்குச் சென்றுள்ளதுடன், இரவு நேர உணவை உட்கொண்ட பின்னர் மீண்டும் வீட்டுக்கு வந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் வயோதிபப் பெண்ணின் உறவினர்கள் இருவர் வீட்டுக்கு வருகை தந்துள்ளனர். அந்த வயோதிபப் பெண் தங்கியிருந்த வீட்டின் முன் கதவு திறந்திருந்த நிலையில் அவரைத் தேடியுள்ளனர் என சொல்லப்படுகிறது.

பின்னர், வீட்டுக்குள் சென்று படுக்கை அறையில் பார்த்த போது அந்த வயோதிபப் பெண் இரண்டு கைகளும் கட்டப்பட்ட நிலையில் கட்டிலில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சம்பவம் பற்றி அந்த வயோதிபப் பெண்ணின் மகளுக்கு அறிவிக்கப்பட்டதுடன், இதுதொடர்பில் பொலிஸ் அவசர பிரிவினருக்கும், மதுரங்குளி பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மதுரங்குளி பொலிஸாரும், புத்தளம் பிரிவு பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

வயோதிபப் பெண் தங்கியிருந்த வீட்டின் மூன்று ஓடுகள் பிரிக்கப்பட்டிருந்தன எனப் பொலிஸார் கூறினர்.

சம்பவம் இடம்பெற்ற இரவு வயோதிப பெண் தனது மகளின் வீட்டுக்கு சென்று மீண்டும் தனது வீட்டுக்கு வரும் முன்னர் சந்தேகநபர்கள் இவ்வாறு வீட்டின் கூரையை பிரித்துக் கொண்டு உள்ளே பதுங்கி இருந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு பொலிஸ் மோப்ப நாயும் அழைத்து வரப்பட்டு அந்த வயோதிபப் பெண் தங்கியிருந்த வீடு மற்றும் வளவு என்பனவும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அத்துடன், புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார, பதில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியந்த ஆகியோரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து, மேற்பார்வை செய்து, மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளைப் பொலிஸாருக்கு வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஏ.எம்.சம்சுல் ராபி, சடலத்தை பார்வையிட்டு, சம்பவ இடத்தில் நீதிவான் விசாரணையை முன்னெடுத்ததுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நல்லாந்தளுவ பகுதியில் பெரும் பரபரப்பையும் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# கிராம உத்தியோகத்தர்கள் இன்றும் பணிப்புறக்கணிப்பு

அனைத்து சேவைகளிலிருந்தும் விலகி முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க போராட்டத்தை இன்றும் தொடர்வதற்கு கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது.

தங்களது கோரிக்கை தொடர்பில் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நேற்று கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கம் பேச்சுவார்த்தையை நடத்தியது.

அந்த பேச்சுவார்த்தையில் எந்தவித இணக்கப்பாடும் எட்டப்படாத நிலையில், இன்றும் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்ததாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள புதிய சேவை யாப்பை இரத்து செய்யாவிட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி சேவை யாப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, சகல நடவடிக்கைகளிலும் இருந்து விலகி நாளாவிய ரீதியில்



கிராம உத்தியோகத்தர்கள் நேற்றும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



# நாடாளுமன்ற உறுப்பினர் இரு பதவிகள் வெற்றிடம்

ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் நாடாளுமன்ற ஆசனங்கள் வெற்றிடமா கியுள்ளன.

இதனை நாடாளுமன்ற பிரதி பொதுச் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அண்மையில் மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டபூர் வமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னணி யில் அவர்கள் இருவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்தும் விலகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# இறைவரி திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில் பண மோசடி

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில் வர்த்தக நிலையங்களில் பண மோசடிகள் இடம்பெறுகின்றன எனத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித் துள்ளது.

வருமானத்துறை அதிகாரிகள் எனும் போர்வையில் பணம் வசூலிக்க வருபவர்களிடம் பணம் கொடுக்க வேண்டாமென திணைக்களம் பொதுமக்களை அறுவுறுத்தியுள்ளது.

வருமானத்துறை அதிகாரிகளாக போலி வேடம் தரித்து வருகை தரும் நபர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து வகையான வரிகள் தொடர்பான நிலுவைத் தொகைகள் உரிய முறையில் எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டு மாத்திரமே வசூலிக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரி செலுத்துவதில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் அது குறித்து அறிவிக்குமாறும் உள்நாட்டு இறைவரித் திணைக் களம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.




# ஜெயலலிதா குறித்து விமர்சனம் அ.தி.மு.கவினர் சாலை மறியல்

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாக விமர்சனம் செய்ததைக் கண்டிக்கும் விதமாக புதுச்சேரி அ.தி.மு.கவினர் நேற்று தமிழக அமைச்சர் தா.மோ. அன்பரசனின் உருவப்படத்தை கிழித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை விமர்சனம் செய்த தமிழக அமைச்சர் தா.மோ. அன்பரசனை கண்டித்து புதுச்சேரி மாநில அ.தி.மு.க. சார்பில் அண்ணா சிலை அருகே கண்டன மறியல் ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாநில அ.தி.மு.க. செயலாளர் அன்பழகன் தலைமை தாங்கினார். போராட்டத்தின் போது தமிழக அமைச்சர் தா.மோ.அன்பரசனின் படத்தை கிழித்து எறிந்தும், அவரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியும் கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினர் திடீரென சாலை மறியலிலும் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து புதுவை அ.தி.மு.க. மாநில செயலர் அன்பழகன் தெரிவிக்கையில்,

"முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை தொண்டர்கள் மனம் நோகும் அளவில் கேலி செய்து அவதூறாக தி.மு.க. அமைச்சர் அன்பரசன் பேசியது கண்டிக்கத்தக்கது. அரசியல் கட்சியை தற்போது துவங்கியுள்ள நடிகர் விஜய் பற்றி விமர்சனம் செய்வதாக இருந்தால் நேரடியாக அவரை பற்றி பேசுவது நல்ல அரசியல்வாதிக்கு அழகு.

அதை விட்டுவிட்டு ஜெயலலிதாவை பற்றி பேசுவது சரியானதல்ல. திரைப்பட நடிகர்களை தரம் தாழ்ந்து தற்போது பேசும் தி.மு.கவினர் மக்களவைத் தேர்தலில் நடிகர் கமல்ஹாசனை தங்கள் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தியது ஏன்? மறைந்த தலைவர்களை பற்றி அநாகரிமாக பேசிய அன்பரசனை, அமைச்சர் பதவியிலிருந்து தமிழக முதல்வர் நீக்க வேண்டும். அவரது பேச்சுக்கு முதல்வர் மன்னிப்பு கோர வேண்டும்." – என்றார்.

# ராகுல் காந்தி ஆபத்தான மனிதர் கங்கனா ரனாவத் கடும் விமர்சனம்

"இந்த தேசத்தின் பாதுகாப்பையும், பொருளாதாரத்தையும் சீர்குலைக்க ராகுல் காந்தி எல்லா முயற்சிகளையும் செய்கிறார். அவர் மிகவும் ஆபத்தான மனிதர்."

– இவ்வாறு நடிகையும், இமாச்சல பிரதேச எம்.பியுமான கங்கனா ரனாவத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கங்கனா தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"ராகுல் காந்தி மிகவும் ஆபத்தான மனிதர். விஷமி. அழிவுகரமானவர். அவரால் பிரதமராக முடியாவிட்டால் இந்த தேசத்தை அழித்துவிடலாம் என்பதே அவரது செயல்திட்டமாக உள்ளது.



நமது பங்குச் சந்தையை குறிவைத்து வெளியிடப்பட்ட ஹிண்டன்பெர்க் அறிக்கை, ராகுல் காந்தி ஆதரவுடன் வெளியானது என்பது நேற்றிரவு உறுதியானது. இந்த தேசத்தின் பாதுகாப்பையும், பொருளாதாரத்தையும் சீர்குலைக்க ராகுல் காந்தி எல்லா முயற்சிகளையும் செய்கிறார்.

ராகுல் காந்தி அவர்களே, உங்கள் வாழ்நாள் முழுவதும் எதிர்க்கட்சியில் அமர தயாராகுங்கள். நாட்டு மக்கள் உங்களை ஒருபோதும் பிரதமராக்க மாட்டார்கள். நீங்கள் ஓர் அவமானம்." என்று கடுமையாக சாடியுள்ளார்.

அதானி நிறுவனம் வெளிநாடுகளில் உருவாக்கிய போலி நிறுவனங்களில் செபி அமைப்பின் தலைவர் மாதபி புச் பங்குகளை வைத்துள்ளதாக ஹிண்டன்பர்க் நிறுவனம் குற்றம் சாட்டிய நிலையில், இந்த விவகாரம் குறித்து மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்திருந்தார். இந்த விமர்சனத்துக்கு பதிலடியாக தற்போது கங்கனா ரனாவத் ராகுல் காந்தியை சாடியுள்ளார்.

# பீகார் மாநிலத்தில் கோயில் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 7 பேர் பலி

இந்தியாவின் பீகார் மாநில ஜெகானாபாத் மாவட்டத்தின் கோயில் ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். 35 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பீகாரின் ஜெகனாபாத் மாவட்டத்தில் உள்ள மக்தும்பூர் பகுதியில் பாபா சித்தநாத் கோயிலில் இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்த நிலையில், திடீரென ஏற்பட்ட நெரிசலின் போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

எனினும், இந்தியாவில் இது போன்ற சம்பவங்கள் பொதுவானவையாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# உகாண்டா தலைநகரில் குப்பை மேடு சரிந்து விழுந்ததில் 18 பேர் உயிரிழப்பு

உகாண்டா தலைநகர் கம்பாலாவில் குப்பை மேடு சரிந்து விழுந்ததில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக இந்த குப்பை மேடு சரிந்துள்ளதாகவும், அதற்கு அருகில் உள்ள வீடுகள் புதையுண்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் பலர் இதில் சிக்குண்டுள்ள நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இதுவரையில் 14 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.







# பங்களாதேஷில் இந்துக்கள் மீது தாக்குதல்: ஐ.நா கவலை வெளியீடு

பங்களாதேஷில் வாழும் இந்துக் களுக்கு எதிராகப் பரவலாக வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள் ளதுடன், பங்களாதேஷில் உள்ள இந்துக்களைப் பாதுகாக்க முகம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள் ளது.

இதேவேளை, பங்களாதேஷில் இந்துக்கள் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல்களுக்கு எதிராகக் கண்டன பேரணி ஒன்று நடத்தப்பட் டது.

பங்களாதேஷ் இந்து, பௌத்த, கத்தோலிக்க ஒற்றுமை குழுவொன்று இந்த பேரணியினை ஏற்பாடு செய்த தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒலிம்பிக்கில் 220,000 கருத்தடை சாதனங்கள் இலவசமாக விநியோகம்

பாரிஸில் நடைபெற்ற 2024 ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு 220,000 இலவச ஆணுறைகள் மற்றும் கருத்தடை சாதனங்கள் வழங்கப்பட்டன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதில் 200,000 ஆணுறைகளும் 20,000 பெண் கருத்தடை சாதனங்களும் உள்ளடங்குகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் கிராமத்திற்கு வந்த விளையாட்டு வீரர்கள், ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் இந்த ஆணுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போதும் இவ்வாறு கருத்தடை சாதனங்கள் வழங்கப்பட்டன எனவும் இவை பாதுகாப்பான உறவு தொடர்பான விழிப்





புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விநியோகிக்கப்படுவதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 13.08.2024




இன்று நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது சிறந்தது. அதன் மூலம் இன்றைய நாள் சீராகச் செல்லும்.

இன்று பணியில் முன்னேற்றகரமான நிலை இருக்காது. உங்கள் பணிகளை கவனச் சிதறலின்றி கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையை இன்று புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். வாக்குவாதமும் கருத்து வேறுபாடும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று வீணான செலவுகள் செய்ய நேரும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று பதற்ற நிலை உங்களை பாதிக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று உங்களிடம் நம்பிக்கை காணப்படும்.

இன்று நீங்கள் அறிவுப்பூர்வமாக திட்டமிட்டு உறுதியாக பணியாற்றினால் கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் அன்பு பெருகும். இது இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட உதவும்.

பங்கு வர்த்தகம் மூலம் கூடுதல் பண வரவு காணப்படும். இன்றைய நாளை நீங்கள் அதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். அதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அமைதியான மன நிலை காணப்படும். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்ள முடியும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் பணிகள் சுமூகமாக நடைபெறும் உங்கள் தனித்த திறமை மூலமாக உங்களுள் ஒளிந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் துணை உங்களிடம் அன்பான, நட்பான அணுகுமுறை மேற்கொள்வார். இதனால் நல்ல புரிந்துணர்வை உங்களால் பராமரிக்க முடியும்.

பணியிடத்தில் உங்கள் கடின உழைப்பு காரணமாக கூடுதல் ஊக்கத்தொகை மூலம் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.உங்கள் மனதில் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக இன்று நீங்கள் நல்ல உடல் நிலையைப் பராமரிப்பீர்கள்.




இன்று பல தடைகளை சந்திக்க நேரும். குழப்பமான மன நிலை காரணமாக பதட்டம் காணப்படும். பொதுவாக இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். கடினமான நாள்.

இன்று நீங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது அசௌகரியமாக உணர்வீர்கள். அதிகரிக்கும் பணிகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். அகந்தைப் போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி விஷயத்தில் இன்று சில கஷ்டங்களை சந்திக்க நேரும். அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தையும் கவலையையும் அளிக்கும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்படலாம்.




உங்கள் இலக்குகளை அடைவதில் சில தடைகளை சந்திக்க நேரும். அதிகமாக சிந்திக்காதீர்கள். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் பொழுது அசௌகரியமாக உணர்வீர்கள். கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். எனவே குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க திட்டமிட்டு ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் மோதல்கள் காணப்படும். மாறுபடும் சூழல்களை ஏற்றுக் கொண்டு அமைதியாக செயல்பட வேண்டும்.

உங்களின் சம்பாத்தியம் மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகு வலி பாதிப்பு காணப்படும்.




இன்று அமைதியான நாள். வசதிகள் பெருகும் நாள். உங்களிடம் திருப்தியான மனநிலை காணப்படும். நீங்கள் பெரிதாக சாதித்தது போன்று உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள். உங்கள் பணி செய்யும் முறை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் மனதில் நம்பிக்கை தரும் எண்ணங்களும் மகிழ்ச்சியும் காணப்படும்.




இன்று பதற்றம் காணப்படும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல முடிவுகளை எடுக்கலாம். பிரார்த்தனை மற்றும் வழிபாடு உதவிகரமாக இருக்கும்.

இன்று பணியில் பல சவால்களை சந்திக்க நேரும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு அதன்படி மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் பொறுப்புகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். இன்று மகிழ்சிகரமான விஷயங்களையும் எதிர்பார்க்காதீர்கள். இன்று அதிகம் எதிர்பார்க்காதீர்கள்.

பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணிகளை திட்டமிட்டு அதன்படி மேற்கொள்ள வேண்டும்.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் வீட்டு பெரியவர்களின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும். தேவையற்ற உணர்வுகள் காரணமாக ஆரோக்கியம் குறையும். இதன் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.08.2024




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும். இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவு அதிகமாக இருக்கும். உங்கள் மனதில் குழப்பம் காணப்படும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் முடிக்க இயலும்.

உங்கள் துணையுடன் உரையாடும் போது சகஜமாக இருக்க வேண்டும். இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிடுங்கள்.

மிகவும் வருத்திக் கொள்வதன் மூலம் கண்களில் எரிச்சல் ஏற்படலாம். எனவே இதனை தவிர்க்க உற்சாகத்துடன் இருப்பது சிறந்தது.




இன்று மிகவும் அனுகூலமான நாள். நம்பிக்கை உணர்வு அதிகரிக்கும். செழிப்பான நாள். இன்று அமைதியாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமூட்டும் வாய்ப்புகள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெறுவீர்கள.

உங்கள் துணையிடம் நீங்கள் நகைச்சுவை உணர்வோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். உங்கள் கடின உழைப்புக்கான ஊக்கத் தொகை மூலம் அந்தப் பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் நம்பிக்கை காரணமாக நீங்கள் மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். நீங்கள் இன்று விரைந்து முடிவெடுக்கக் கூடிய நல்ல மனநிலையில் இருப்பீர்கள். இன்று மொத்தத்தில் சிறப்பான நாள்.

நீங்கள் பணிகளை விரைவாக மேற்கொள்வீர்கள். நம்பிக்கை மற்றும் உறுதி கொண்டு உங்கள் போராட்டங்களை சமாளிக்கலாம். இதன் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

உங்கள் துணையிடம் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் அவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும். இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம். உங்கள் நிதிநிலையை சிறப்பாக மேம்படுத்திக் கொள்வீர்கள். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் நம்பிக்கை உணர்வு மூலம் இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சற்று மந்த நிலை காணப்படும். உங்கள் செயல்களை ஆற்றும் போது கவனம் தேவை. உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் நீங்கள் இன்று வெற்றி பெறலாம்.

பணியிடத்தில் வெற்றி அவ்வளவு எளிதாக கிடைக்காது. அதிகமான பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இது உறவின் மகிழ்ச்சி நிலையைக் குறைக்கும்.

அதிகரிக்கும் குடும்பப் பொறுப்புகள் காரணமாக அதிக பணம் செலவாகும். இதனால் உங்கள் நிதிநிலை பாதிப்பிற்குள்ளாகும்.




